அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 15/90

அரசாங்க நிருவாக மாகாண சபைகள்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7,
1990 மார்ச்சு 09.

அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்,
அரசாங்க உடைமைக் கம்பனிகளின் தலைவர்களுக்கும்,
அரசாங்க உடைமைத் தொழில் முயற்சிகளின் தகவுடை அதிகாரிகளுக்கும்.

**அரசாங்க பொதுச் சேவை, மாகாண பொதுச் சேவை அரசாங்க கூட்டுத்தாபனத்துறை என்பவற்றின் எதிர்காலத்து ஆட்சேர்ப்புக்கான தேசியக் கொள்கை**

அரசாங்க பொதுச் சேவை (அகில நாட்டுச் சேவை மத்திய சேவைகள்) மாகாண பொதுச் சேவை, அரசாங்க கூட்டுத்தாபனத்துறை (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அரசாங்க உடைமைக் கம்பனிகள்/தொழில் முயற்சிகள்) என்பவற்றுக்கான எதிர்கால ஆட்சேர்ப்பு பதவியுயர்வு வழி நியமனம் ஆகியன இதன் கீழ் காட்டியவாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. (1) எழுதுநர் தரங்களுக்கும் அவற்றுக்கு மேற்பட்டவற்றுக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கான கட்டளை நியமங்கள்.

(அ) அனைத்து நியமனங்களும் அரசியல் ஆதரவுக்கு அப்பாற்பட்டனவாதல் வேண்டும்.

(ஆ) அனைத்து நியமனங்களும் கீழே குறிப்பிடப்படும் (உ), (ஊ), (எ) க் கட்டளை நியமங்களுக்கு இடமளித்து திறமையடிப்படையில் அமைதல் வேண்டும்.

(இ) அனைத்துப் பதவிகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒருவரின் திறமை எழுத்துப்பரீட்சை மூலம் அல்லது எழுத்துத் தேர்வு மூலம் அல்லது தொழிற் தேர்வு மூலம் நிர்ணயிக்கப்படல் வேண்டும். ஒரு விண்ணப்பகாரர் மட்டுமேயுள்ள விடத்து நேர்முகப்பரீட்சை நடத்தப்படல் வேண்டும்.

(உ) அரசாங்க பொதுச்சேவை, அரசாங்கக் கூட்டுத்தாபனத்துறை அரசாங்கத்தின் முழு உடைமை கொம்பனிகள் என்பவற்றுக்கான ஆட்சேர்ப்பு, கீழே குறிப்பிட்டுள்ள (எ) நியமத்துக்கு இடமளித்து, மாவட்டங்களிடையே சனத்தொகையடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். மாவட்டச்சனத்தொகை விகிதாசாரம் அட்டவணையில் (இணைப்பு 1) காட்டிய விகிதாசாரப்படியமைதல் வேண்டும். மாகாண பொதுச்

மாவட்டங்களுக்கு கீழே குறித்த (எ) நியமத்துக்கும் இடமளிப்பதாய், ஏற்புடைத்தாகும். இது 1990.01.01 முதல் செயல்வலுவுடைத்தாகும்.

(ஊ) சில மாவட்டங்கள் அவற்றுக்கு வகுத்தொதுக்கப்பெற்ற இடங்களை (மேலே (உ) வில் காட்டியவாறு) உட்கொள்ளாதவிடத்து அத்தகைய இடங்கள், மாகாணத்திலுள்ள அயல் மாவட்டங்களுக்குச் சனத்தொகை விகிதாசார அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும்.

(எ) தேசிய மட்டத்திலான ஆட்சேர்ப்பும் பதவியுயர்வளிப்பும் தேசிய இனவிகிதாசார அடிப்படையிலும், மாகாணமட்டத்திலானவை மாகாண இனவிகித அடிப்படையிலும் மாவட்ட மட்டத்திலானவை மாவட்ட இனவிகித அடிப்படையிலும், (அ) முதல் (ஊ) வரையான நியமங்களுக்கு இடமளிப்பதாய், அமைதல் வேண்டும். இது 1990.01.01 முதல் செயல்வலுவுடைத்தாகும்.

சிங்கள சமூகத்துக்கான இனவிகிதாசார அமைவு மொத்த வெற்றிட எண்ணிக்கையின் 75% ஆகும். தமிழர், இந்திய வமிசவழியினர், முசிலிம்கள் ஆகியோர் முறையே 12.7%, 5.5%, 8% என்ற விகித அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். எவ்வாறாயினும் சரியான எண்ணிக்கையைத் தீர்மானிக்கவியலாவிடத்து 2% கூட்டல் அல்லது கழித்தல்வழி சிறிது மாற்றம் இடம்பெறல் சாலும்.

ஒரு மாகாணத்திற்குட்பட்ட ஆட்சேர்ப்பும் பதவியுயர்வளிப்பும் அம்மாகாணத்தின் இனவிகித அடிப்படையில் இடம்பெறல் வேண்டும். அவ்வாறே ஒரு மாவட்டத்திற்குட்பட்ட ஆட்சேர்ப்பும் பதவியுயர்வும் அம்மாவட்டத்தின் இனவிகித அடிப்படையில் இடம்பெறல் வேண்டும். மாகாண இன விகிதாசாரம் (வீதங்கள்) விகிதாசார அட்டவணையின் (இணைப்பு 11) வண்ணம் அமைதல் வேண்டும்.

(ஏ) நேர்முகச்செவ்வி, தகைமைச் சான்றிதழ்களையும் உடல்நலத்தகுதியையும் பரிசீலிப்பதற்கு மட்டுமே நடத்தப்படல் வேண்டும்.

02. (1) எழுதுநர்தரங்களுக்குக் குறைந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான கட்டளை நியமங்கள்.

(அ) எழுதுநர் தரங்களிலுங் குறைந்த நிலையிலுள்ள, அரசாங்க கூட்டுத்தாபனத் துறை தவிர்ந்த அனைத்து பதவி வெற்றிடங்களுக்குமான ஆட்சேர்ப்பு மாவட்டமட்டத்தில் இடம்பெறல் வேண்டும். எவ்வாறாயினும், மாவட்ட மட்டத்திலான வெற்றிடங்களானவை வெற்றிடங்களையுள்ள மாவட்டம் அதற்குரிய பங்குத்தொகையின் இருமடங்கான விகிதாசாரத்தில் பதவிகளைப் பெறத்தகும் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். இது 1990.01.01 முதல் செயல்வலுவுடைத்தாகும்.

கூட்டுத்தாபனத்துறைக்கு அமைவுடைய கொள்கையும் கோட்பாடும் அமைச்சரவை உபகுழுவினால் பரிசீலிக்கப்பட்டு அது தொடர்பான அமைச்சரவைக்குச் சிபாரிசுகள் செய்யப்படும்.

(ஆ) நியமனங்கள் அனைத்தும் அரசியல் ஆதரவுக்கு அப்பாற்பட்டனவாகி, திறமையடிப்படையில், கீழே குறிப்பிடப்பெறும் (இ), (ஈ) கட்டளை நியமங்களுக்கிடமளிப்பனவாயமைதல் வேண்டும். திறமை பரீட்சை அல்லது எழுத்துச் தேர்வு அல்லது தொழிற் தேர்வு மூலம் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

(இ) ஆட்சேர்ப்பில் மாவட்டத்தினது ஆக்க அமைவின் இன விகிதப்பங்குகள் மேலே குறித்த (அ) நியமத்துக்கிடமளித்து, உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இது 1990.01.01 முதல் செயல்வலுவுடைத்தாகும். மாவட்டங்களின் இன விகிதாசாரம், (இணைப்பு 111 இல் உள்ள) விகித அட்டவணையின்படியமைதல் வேண்டும்.

(ஈ) வெற்றிடங்களைப் பகிர்ந்தளிக்குமிடத்து அதற்கு/ஒரு மாவட்டம் வகுத்தளிக்கப்பெற்ற இடங்களை உட்கொள்ளாதவிடத்து, அத்தகைய இடங்கள் மாகாணத்திலுள்ள அயல்மாவட்டங்களுக்கு மீளப்பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3. (1) அரசாங்கச் சேவை.
(11) அரசாங்கக் கூட்டுத்தாபனத்துறை.
(111) மாகாண சேவை.

ஆகியவற்றில் தரத்திலிருந்து தரங்களுக்கான பதவியுயர்வுகள் அடங்கலாக பதவி உயர்வு சந்தர்ப்பங்கள் அனைத்தும் 1990.01.01 இல்இருந்து அத்தகைய சேவைகளுக்கு ஏற்புடைத்தாய இன விகிதக் கோட்பாட்டின்படி செய்ய வேண்டும். 1987,1988 1989 ஆண்டுகள் போன்ற முன்னைய ஆண்டுப் பதவி வெற்றிடங்கள் தொடர்பில் 1990.01.01க்குப் பின்னர் பதவியுயர்வுகள் ஏலவே செய்யப்பட்டு இருக்குமிடத்து அப்பதவியுயர்வுகள் தடுக்கப்படலாகாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் மேலதிகமான பதவிகளை உருவாக்குவதன் மூலம் இன விகிதாசாரம் செயற்படுத்தப்படுதல் வேண்டும்

சேவையின் தற்போதைய இனவமைப்பு இன விகிதத்தைப் பிரதிபலிக்காத நிலையிலும் ஒரு காலப்பகுதியின் பின்னர் சேவையில் தரத்திலிருந்து தரத்துக்கு தானாகவே நிகழும் பதவியுயர்வுச் சந்தர்ப்பங்களிலும் ஏற்படும் இக்கட்டு நிலைகள் போல எழக்கூடிய ஏனைய பிற விடயங்களை, அத்தகைய இக்கட்டு நிலைகளைச் சரி செய்வதற்கான திட்டம் ஒன்று அரசாங்க நிருவாகம், மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோரால் தயாரிக்கப்படு

4. மாகாண பொதுச் சேவைக்கான ஆட்சேர்ப்பு, அந்தந்த மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுக்களால், அரசாங்கத் துறை, உள்ளூராட்சிச் சேவை ஆகியவற்றில் ஏலவே உள்ள உத்தியோகத்தர்களின் உள்ளெடுப்பு, நியமிப்பு வேலைகள் 1989.11 தேதியிட்ட 56/89 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தின் நியதிகளின் பூர்த்தி செய்யப்பட்டபின்னர் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

5. கிடைக்கத்தக்க பதவியுயர்வு நிலைகளின் மொத்த எண்ணிக்கை ஒரு சில எண்ணிக்கையினதாக இருந்து (உ-ம் நான்குக்குக் குறைவாக இருந்து) அத்தகைய விகிதப் பிரயோகத்துக்கு உதவாததாய் அமையும் பிரத்தியேக நிலைமைகளில் இன விகிதம் பிரயோகிக்கத்தக்கதாக இல்லாது இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் தனித்தி மட்டுமே தெரிவு மையமாக இருக்கும் அத்தகைய விடயம் ஒவ்வொன்றும் கீழே உள்ள 8 ஆம் பந்தியின்படி அமைக்கப்படும் குழுவுக்கு அறிவிக்கப்படுதல்.

வேண்டும். அறிக்கையிடுவதற்கு அத்தகைய விடயம் எதுவும் இல்லாதிருந்தால் 'இன்மை' அறிக்கை ஒவ்வொரு ஆறு மாதத்திலும் அனுப்பப்படுதல் வேண்டும்.

06. நியமிப்பு அதிகாரிகள், தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்களைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். பல்வேறு பதவிகளிலுள்ள வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தும், விரும்பத்தக்க வகையில், ஒரு வருடத்துக்கு முன்பாக, தெரிவிக்கப்படுவதை நியமிப்பு அதிகாரிகள் உறுதிப் படுத்துதல் வேண்டும். பரீட்சை ஒன்று நடாத்தப்படவுள்ளவிடத்து தொடர்புள்ள நிறுவனங்கள் பாடத்திட்டத்தை நேரகாலத்துடன் அறிவித்தல் வேண்டும். அப்போது தான் வேட்பாளர்கள் பல்வேறு பரீட்சைகளுக்கும் தயார் செய்து கொள்ள முடியும்.

பரீட்சைகளும் நேர்முகப் பரீட்சைகளும், நேர்முகப் பரீட்சைக்கு உட்படுபவர்கள் தெரிவு செய்யும் மொழியில், நடாத்தப்படுதல் வேண்டும்.

07. நியமிப்பு அதிகாரிகள் மீளாய்வுச் சபை ஒன்றைத் தாபித்து, வேட்பாளர்களுக்கு, தேவையானவிடத்து, அவர்களின் விடைத்தாள்களை மீள நுணித்தாய்வு செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கு ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் திருத்தல் நடவடிக்கையை விதந்துரைப்பதற்கு சபைக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும்.

08. மேற்குறித்த ஏற்பாடுகளின் செயற்பாட்டைக் கண்காணிப்பதற்கு அரசாங்க நிருவாக மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு குழு ஒன்றை அமைக்கும். இத் திட்டம் ஒரு வருடத்துக்குத் தொழிற்படுத்தப்பட்ட பின்னர், அதன் தொழிற்பாட்டை அக்குழு மீளாய்வு செய்து, மதிப்பிட்டு அது பற்றிய அதன் விதப்புரைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும்.

09. இந்தத் திட்டத்தை, அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், அரசாங்கக் கூட்டுத் தாபனங்களின் தலைவர்கள், அரசாங்க உடைமைக் [illegible] கம்பனிகளின் தலைவர்கள், அரசாங்க உடைமைத் தொழில் முயற்சிகள் [illegible] தகுதி வாய்ந்த அதிகாரிகள் ஒரு தேசியக் கொள்கை விடயமாகச் செயற்படுத்துதல் வேண்டும். இப்பந்தியில் முன்னர் குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் இத்திட்டத்தின் செயற்பாட்டுக்கு பொறுப்பாளிகள் ஆக்கப்படுவர்.

[illegible] ...டும்.

10. கூட்டுத்தாபனங்களும் அரசாங்க உடமைக் கம்பனிகளும் இத்தீர்மானங்களைத் தமது பணிப்பாளர்கள் சபையின் கவனத்துக்கு, அதன் அடுத்த கூட்டத்தில், கொண்டு வந்து அதை நிகழ்ச்சிக் குறிப்பில் செயற்படுத்துவதற்கான ஒரு பூர்வாங்க நடவடிக்கையாகப் பதிதல் வேண்டும்.

11. அமைச்சரவை உபகுழு இத்திட்டத்தை ஒவ்வொரு ஆறு மாதமும் மீளாய்வு செய்து, தேவையான விடத்து, அமைச்சரவைக்கு விதப்புரைகளை வழங்கும்.

ஒப்பம்: பீ.என்.எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.